Registered at the G. P. O. as a Newspaper உள்ளூர்ப் பதிப்பு விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி மாசி 25-ஆம் நாள் றம்ழான் 20. (8-3-61) புதன்கிழமை இதழ் 22




ஆயுதபலத்தால்

# அடக்கி ஆள முடியாது

## எவ்வித தியாகத்துக்கும் தமிழினம் தயார்

### பிரதமர் சிறிமாவுக்கு நல்லூர் எம். பி. பதில்

யாழ்ப்பாணம், புதன்

**"ஆயுத பலத்தால் அல்லது அரசியல் துரோகத்தால் ஒரு நாடு இன்னொரு நாட்டைக் கைப்பற்றலாம். ஆனால் மக்களின் சம்மதமின்றி அதை ஆள முடியாது என்ற சரித்திர உண்மையை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா உணர வேண்டும்."**

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் நடைபெறவில்லை என்பதை பிரதமர் ஒப்புக்கொண்டுவிட்டார். சுயமரியாதைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் தமிழ் மக்கள் எவ்வித தியாகத்துக்கும் தயாராய் இருக்கிறார்கள் என்பதையும் அவர் உணரட்டும்."

"இராணுவத்தின் முரட்டுத்தனத்திற்கும், சட்டவிரோதமான அட்டூழியத்துக்கும் நாங்கள் அடிபணியமாட்டோம். இதையும் அவர் தெளிவாக உணரட்டும்" என சத்தியாக்கிரகத்தைக் கைவிடுமாறு வானொலி மூலம் பிரதமர் விடுத்த வேண்டுகோளுக்கு டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஓர் அறிக்கைமூலம் பதிலளித்துள்ளார்.

நல்லூர் எம். பி. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தமிழரசுக் கட்சியின் சார்பில் நேற்றுக் காலை விடுத்த அறிக்கை வருமாறு:-

இலங்கையின் பிரதமமந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பொதுவாக தமிழ்ப் பேசும் மக்களுக்கும் குறிப்பாக தமிழரசுக்கட்சிக்கும் வானொலியில் ஒரு செய்தி விடுத்தார். "மொழிச் சட்டத்தை அமுல் நடத்தும்பொழுது தமிழ் மக்களுக்கு வசதியீனங்களோ கஷ்டங்களோ ஏற்படுமானால், காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டிலிருந்து திரும்பியபின், அவைபற்றி பரிசீலனை செய்ய நான் தயாராக இருப்பேன்" என்ற வாக்குறுதியைத் தவிர அதேசமயம் "அரசாங்கத்தின் சிங்களம் மட்டும் கொள்கையில் இம்மியளவும் மாற்றம் ஏற்படமாட்டாது' என்று திட்டவட்டமாகத் தெரிவித்து, சத்தியாக்கிரக இயக்கத்தைக் கைவிடும்படி அந்தச் செய்தியில் பிரதமர் சிறிமா கேட்டிருக்கிறார். "சத்தியாக்கிரகம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லையென்பதைத் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்" என்றும் அவர் தமது செய்தியில் தெரிவித்திருந்தார்.

**சரித்திர உண்மை**

ஒன்றில் திருமதி பண்டாரநாயக்கா சரித்திர உண்மைகளை அறியாமலிருக்கவேண்டும் அல்லது குருடாக இருக்க வேண்டும்.

(6ம் பக்கம் பார்க்க)

## இன்று யாழ்ப்பாணம் வர்த்தகர் சத்தியாக்கிரகம்

### நாவலர் சந்தியிலிருந்து ஊர்வலம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் வர்த்தகர்களின் தமிழ் இயக்கம் இன்று காலை 9-30 க்கு நாவலர் சந்தியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு கச்சேரியைச் சென்றடையும். அங்கு சத்தியாக்கிரகிகளுடன் சேர்ந்து வர்த்தகர்களும் மறியல் இயக்கத்தில் ஈடுபடுவார்கள்.

**[10-3-61 வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த இந்த ஊர்வலமும் மறியல் இயக்கமும் இன்று நடாத்துவதென யாழ். வர்த்தகர் தமிழ் இயக்கச் செயற்குழு நேற்றிரவு முடிவு செய்தது.]**

யாழ்ப்பாண வீதிகளில்

## மாணவர் மாபெரும் ஊர்வலம் அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு

யாழ்ப்பாணம் புதன்

'இராணுவமே திரும்பிப் போ!' 'செந்தமிழ் செழிப்புறுக' 'இன்றைய மாணவர் நாளைய தலைவர்கள்' என்ற பலசுலோக அட்டைகளைத் தாங்கிக் கொண்டு நேற்றுக் காலை யாழ்ப்பாணக் கச்சேரியை நோக்கி மாபெரும் மாணவர் ஊர்வலம் ஒன்று கோட்டை மைதானத்தில் ஆரம்பமாகி முக்கியவீதிகள் வழியே நகர்ந்துகொண்டிருந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு கல்லூரிகளின் மாணவர்கள் இந்த ஊர்வலத்தில் அமைதியாகக் கலந்துகொண்டு சென்ற இக்காட்சியை யாழ்ப்பாணம் இதுவரை கண்டதில்லை.

'மாணவர் விடுதிகள் மாணவர்களுக்கே.' இராணுவமே வெளியேறு' என்று கொட்டை எழுத்துக்களில் பொறித்த கொடிகளும் காணப்பட்டன.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் நடந்து செல்ல அவர்களைப் பின் தொடர்ந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் சைக்கிள்களில் சென்றனர்.

மாணவர்களின் இந்த மாபெரும் ஊர்வலம் கச்சேரியை அடைந்து அங்கிருந்து அப்படியே அமைதியாகச் சென்றது.

## கல்லூரிகளிலிருந்து இராணுவம் வெளியேற்றம்

யாழ்ப்பாணம் புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள பல கல்லூரிகளில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரை இன்னும் சொற்பநாட்களுக்குள் தாம் அகற்றப் போவதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நிஸங்கா விஜயரத்ன பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியிற் கூறினர்.

இந்திய

## உள்நாட்டு மந்திரி காலமானர் யமுனைக்கரையில் தகனக்கிரியை

### நாடெங்கும் ஒருவாரம் துக்கம்

புதுடில்லி மார்ச் 7

இந்திய உள்நாட்டு மந்திரி பண்டித கோவிந்தவல்லபபந்த் இன்று காலை 8-50க்குக் காலமானர். சுகவீனம் காரணமாய்பிப்ரவரி 20ம் தேதி முதல் சாகும்வரை பிரக்ஞையற்றிருந்த அவர் புதுடில்லி வாசஸ்தலத்தில் காலமானபோது அருகில் புதல்வர்களும் புதல்விகளும் ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத், மந்திரி கிருஷ்ண மேனன் உட்பட பல பிரபலஸ்தர்களும் இருந்தனர்.

லண்டன் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டுக்குச் சென்றுகொண்டிருந்த திரு. நேருவுக்கு மரணச்செய்தி உடனடியாக அறிவிக்கப்பட்டது.

**தகனக்கிரியை**

இன்று மாலை சரியாக 5-25க்கு டில்லி யமுனைக்கரையிலுள்ள' 'நிகம்போ காட்'டில் பந்தின் சடலம் தகனம் செய்யப்பட்டது. பகல் இரண்டரை மணிக்கு பூரண ராணுவ மரியாதைகளுடன் அது தகனக்கிரியைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. முப்படைகள் அணிவகுப்புடன் பந்தின் சடலம் பீரங்கி வண்டியில் வைக்கப்பட்டிருந்தது.

(5ம் பக்கம் பார்க்க)

### நேரு கண்ணீர் சிந்தினர்

லண்டன் மார்ச்7

பண்டித பந்தின் மரணத்தைக் கேள்வியுற்ற நேரு லண்டன் விமான நிலையத்தில் கண்ணீர் சிந்தினர். 30 வருடங்களுக்கு முன் தானும், பண்டித பந்தும் சுதந்திரப் போராட்ட சமயத்தில் ஊர்வலம் ஒன்றுக்குத் தலைமை வகித்துச் சென்றதை அவர் நிருபர்களுக்கு நினைவூட்டினர்.

## தபால்ஊழியர் வேலைநிறுத்தம்பற்றி மந்திரி ஆலோசனை

### தபால்களை யாழ்ப்பாணம் அனுப்பவேண்டாமென உத்தரவு

யாழ்ப்பாணம் புதன்

யாழ்ப்பாணத்தில் தபால் சிப்பந்தி ஒருவரை கடற்படையினர் தாக்கியது சம்பந்தமாக விசாரணை செய்து இப்போதைய நிலையைச் சமாளிப்பதற்கான பேச்சு வார்த்தைகள் கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தபால் தகவல் மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல இதுசம்பந்தமாக போஸ்ட் மாஸ்டர் ஜெனரலுடன் பேச்சுகள் நடத்திக்

### ஐ. நா. பொதுச் சபை ஆரம்பம்

நியுயோர்க், மார்ச்7

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டம் இன்று நியுயோர்க்கில் ஆரம்பமாகியது.

## தமிழ்ப்பகுதி அரசாங்க அதிபர்களுடன் சி. பி. டிசில்வா மகாநாடு

யாழ்ப்பாணம், புதன்

மந்திரிசபையின் தற்காலிக தலைவரும், காணி அபிவிருத்தி மந்திரியுமான திரு ஸி. பி. டி. சில்வா யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களின் அரசாங்க அதிபர்களைக் கொழும்புக்கு அழைத்து விசேஷ மகாநாடொன்றைக் கூட்டி ஆலோசனை நடத்தினர்.

சத்தியாக்கிரகம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூன்று பகுதிகளிலும் நிலைமை எவ்வாறிருக்கிறதென்பதை அறிவதற்காகத்தான் இந்த மகாநாடு கூட்டப்பட்டது.

வெளிவிவகார இலாகாவின் பதில் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸ் நேற்றுச் சத்தியாக்கிரகம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூன்று

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

சுதந்திரம் என்பது கடவுள் அருளிய கொடை. அது ஒவ்வொருநாட்டுக்கும் உரிய உரிமை.
—காந்திஜி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு மாசி மீ 25 உ (8-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## யாழ்ப்பாணத்தில் இராணுவம்

யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து வைத்துள்ள இராணுவத்தை உடனே திருப்பி அழைக்கவேண்டுமென்று நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெற்ற பெரிய பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது. ஒரு கட்சியைத் தவிர மற்றெல்லாக் கட்சித் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர். நேற்றுக் காலையில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அடங்கிய பெரிய ஊர்வலமும், இதே நோக்கத்துடன் நகர வீதிகளில் பவனி வந்தது. இங்கு பொது மக்களின் கருத்தும் உணர்ச்சியும் எப்படியுள்ளதென்பதை அரசாங்கம் இதிலிருந்து சுலபமாக உணர்ந்துகொள்ளலாம்.

பொது மக்களின் நன்மையைக் கருதி, அவர்களுக்கான உணவு, சுகாதாரம் முதலிய அத்தியாவசிய சேவைகள் தடைபடாமல் இருக்கும் பொருட்டே, இராணுவச் சட்டத்தின் 23-வது விதிப்படி இராணுவம், கடற்படை, ஆகாயப்படை இம் மூன்றையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இந்தப் படைகள் இங்கு வந்தபின், பொதுமக்களின் அத்தியாவசிய சேவைகளின் நிலை எப்படியுள்ளதென்பதைப் பார்ப்போம்.

தபாலும், தந்தியும் பொது மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளேயாகும். சென்ற ஐந்து நாட்களாக யாழ்ப்பாணத்தில் இச் சேவைகள் அறவே நின்றுவிட்டன. காரணம். ஒரு தபால் ஊழியர் தமது கடமையைச் செய்கையில், கடற்படையைச் சேர்ந்த ஒரு சிப்பாய் அவ்வூழியரைத் துப்பாக்கியால் தாக்கி படுகாயப்படுத்தியதால் தபால், தந்தி சேவகர்கள் எல்லாரும் ஆட்சேபித்து, தங்களுக்குத்தக்க பாதுகாப்பு அளித்தாலொழிய, வேலை செய்ய முடியாதென்று தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்துக்குப் பிறகு கடற்படையினர் அனைவரும் வீதிகளிலிருந்து திருப்பி அழைக்கப்பட்டு விட்டாலும் தபால், தந்தி அத்தியாவசிய சேவைகள் மக்களுக்கு இன்னும் மறுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பொது மக்களின் அத்தியாவசிய சேவைகளுக்கு உதவுவதற்கே இராணுவம் இங்கு இருப்பது உண்மையானால், இராணுவ சிப்பாய்களைக் கொண்டு, தபால், தந்தி சேவைகள் தடைபடாமல் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி எதுவும் செய்யப்படவில்லை. இராணுவத்தையும் நீக்கி விட்டால், பயமின்றி தபால் ஊழியர்கள் தங்கள் கடமைகளைச் செய்யக்கூடும். ஆகவே இச் சேவைகளைப் பொறுத்தவரையில், இராணுவம் இங்கு தொடர்ந்து இருப்பது பொது மக்களுக்கு உதவிக்குப் பதில் உபத்திரவமென்பது தெளிவாகும்.

மேலும் இங்கு சில கல்லூரிகளில், இராணுவம் திடும் பிரவேசம் செய்து, மாணவர்களை விடுதிகளிலிருந்து வெளியேற்றியதுடன், குறிப்பிட்ட கல்லூரிகள் மூடப்படும்படியும் நேரிட்டது.

இராணுவத்தினரை சீக்கிரத்தில் அங்கிருந்து அகற்றி விடுவதாக தற்காலிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளாரெனினும் கல்வி எனும் அத்தியாவசிய சேவைக்கு இராணுவம் வந்ததால் உதவியில்லை. இதற்கு மாருகப் பல மாணவர்களுக்கு சங்கடமே.

இதைத் தவிர ஆங்காங்கே சில இராணுவச் சிப்பாய்கள் சும்மா இருக்க முடியாமல் அற்ப விஷமங்கள் செய்வதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் கிடைக்கின்றன. கத்தி பிடித்தவன் கை சும்மா இராதென்று ஒரு வசனமுண்டு. அற்ப விஷயமும் பிரமாதமாகிவிடலாம்.

இப்பத்திகளில் நேற்று பங்கீட்டு அரிசி வினியோகம் எனும் அத்தியாவசிய சேவைக்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையைப் பற்றி எழுதியிருந்தோம். இச் சேவைகளைப் பாதுகாத்து பொது மக்களுக்கு உதவவே இராணுவம் இங்கு கொண்டுவரப்பட்டுள்ளதாயின், அவர்களைக் கொண்டு, இச் சேவைகள் தடைபடாமல் இருக்க, அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி மக்களுக்கு உதவியாக ஒன்றும் செய்யாவிடில் அவர்களை இங்கு வைத்திருப்பதால் எல்லாருக்கும் வீண் உபத்திரவம்தானேயன்றி சிறிதும் நன்மையில்லை. இதை உணர்ந்து அரசாங்கம், பொது மக்களின் நன்மைக்கும் கருத்துக்கும் இணங்க உடன் காரியங்கள் செய்வதே சட்டத்துக்கும் அமைதிக்கும் உகந்ததாகும்.

# கென்யாவில் வளரும் அரசியல் நெருக்கடி

## தலைவர் கென்யாட்டா விடுதலை செய்யப்படுவாரா?

**கென்யாதேர்தல் சமீபத்தில் நடைபெற்றுசுதேசிகளுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் கட்சிகள் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளன. கென்யாவின் வடபகுதியில் காவலில் வைக்கப்பட்டுள்ள கென்யா மக்கள் தலைவர் ஜோமோ கென்யாட்டாவை விடுதலை செய்தால் அன்றி அரசாங்கம் அமைக்க ஒத்துழைக்க முடியாது என்று பெரும்பான்மைப் பலத்தையுடைய கட்சிகள் கவர்னருக்கு அறிவித்திருப்பதால் அங்கு அரசியல் நெருக்கடியொன்று ஏற்பட்டிருக்கிறது.**

ஆபிரிக்காவிலுள்ள கென்யா என்ற நாட்டின் பெயரைக் கேட்டதும் சில வருடங்களுக்கு முன் அங்கு செயல்பட்ட 'மாவ் மாவ்' இயக்கம் பலருக்கு ஞாபகத்துக்கு வரலாம். கென்யாவில் வெள்ளையர் ஆட்சியை ஒழித்துச் சுதந்திர அரசாங்கம் நிறுவ வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த விடுதலை இயக்கம் அங்கு ஆரம்பிக்கப்பட்டது.

1954-ம் ஆண்டு பிரிட்டிஷ் துருப்புக்கள் 'மாவ் மாவ்' இயக்கத்தை முறியடிக்கும் நடவடிக்கையில் இறங்கினர்.

'மாவ் மாவ்' இயக்கத்தில் தொடர்பு கொண்டவர்கள், சட்ட விரோதமான ஆயுதம் வைத்திருந்தவர்கள், இயக்கத்தினர் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ளுவதில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. 60 ஆயிரத்துக்கு அதிகமான பயங்கரவாதிகளும் காவலில் வைக்கப்பட்டனர். அப்படிக் அவர்களின் அனுதாபிகளும் காவலில் வைக்கப்பட்டவர்களில் ஜோமோ கென்யாட்டாவும் ஒருவர்

பிரிட்டனின் ஆதிக்கத்திலுள்ள கிழக்கு ஆபிரிக்காவில் கென்யா ஒரு குடியேற்ற நாடாகவிருக்கிறது.

இந்து சமுத்திரத்திலிருந்து பரந்து கிடக்கும் இந்நாடு, சொமாய்லாந்து, எதியோப்பியா, உகண்டா, தங்கநிக் ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டிருக்கிறது. அதன் நிலப்பரப்பு 224,960 சதுர மைல்களாகும். நைரோபி அதன் தலைநகராக விளங்குகிறது.

### பொருள் வளம்

கென்யாவின் வடக்குப் பிரதேசம் சதுப்பு நிலமாகவிருக்கிறது. தென்பிரதேசத்தில் தான் பொருள் உற்பத்திகள் பெருவாரியாகக் காணப்படுகின்றன. அதன் மலைப் பிரதேசத்தில் 50 லட்சம் ஏக்கர் நிலம் ஐரோப்பியருக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தேயிலை, கோப்பி ஆகியவற்றுடன் இதர தானியவகைகளும் இங்கு முக்கிய விளை பொருள்களாக விருக்கின்றன. கனிப்பொருள் உற்பத்தியும், பால்பண்ணை நடத்துவதும் இங்குள்ள வேறு முக்கிய தொழில்களாகும்.

'மாவ் மாவ்' இயக்கம் அடக்கப்பட்டு அமைதியேற்பட்ட பின்னர் கென்யா மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டியதின் அவசியத்தைப் பிரிட்டன் உணர்ந்தது.

### பொதுத் தேர்தல்

சமீபத்தில் கென்யாவில் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டதும் அதன் அறிகுறியாகும். 44 தொகுதிகளுக்கு 53 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் "திறந்த" தொகுதிகள் என்று அழைக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 33 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இப்பகுதிகளில் போட்டியிட்டவர்களில் இருவர்தான் ஆபிரிக்கர் அல்லாதார். எஞ்சியுள்ள 20 தொகுதிகளிலிருந்தும் 10 ஐரோப்பியர்களும், 5 முஸ்லிம் அல்லாத ஆசியாக்காரரும், 3 ஆசிய முஸ்லிம்களும் 2 அராபியரும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் பூர்வாங்கமாக முதலில் நடத்தப்பட்ட ஒரு தேர்தலில் தங்கள் தங்கள் இனத்தவர்களின் 25 சதவிகித ஆதரவைப் பெற்றவர்களாவர். இந்த ஆதரவைப் பெறாத பட்சத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிட அவர்களுக்குத் தகுதியில்லையென்று கருதப்படும். கென்யாவில் பலதரப்பட்ட ஜாதிப் பிரிவுகளையும் வளர்ப்பதற்கான ஏற்பாடுதான் இது.

டொம் எம்போயா என்பவரைத் தலைவராகவும், செயலாளராகவும் கொண்ட கென்யா ஆபிரிக்க தேசியச் சங்கம் 16 ஸ்தானங்களையும், ஆபிரிக்க ஜனநாயக சங்கம் 10 ஸ்தானங்களையும் கென்யா கூட்டு முன்னணியும், ஐரோப்பிய தீவிரவாதிகள் குழுவும் கென்யா இந்தியன் காங்கிரஸைப் போலவே 3 ஸ்தானங்களையும் ஜயித்துள்ளன. நவ கென்யா கட்சி 4 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கிறது. கென்யா சுதந்திரக்கட்சி ஒரு ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. 14 ஸ்தானங்களை சுயேச்சைகள் கைப்பற்றியுள்ளனர்.

### ஆபிரிக்கருக்குப் பெரும்பான்மை

கென்யாவில் நடைபெற்றுள்ள தேர்தலின்படி புதிய சட்ட சபையில் ஆபிரிக்கருக்குப் பெரும்பான்மை பலமிருக்கும். ஆனால் ஆபிரிக்கமக்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியல் கட்சிகள் யாவும் ஒருமித்து செயல்படாதபட்சத்தில் உருப்படியாக எதுவும் அங்கு நடைபெறுவது சாத்தியமில்லை. தேர்தல் மிக அமைதியாகவே நடைபெற்று முடிந்திருக்கிறது. எம்போயாவின் தலைமையிலுள்ள கட்சி அதிகப்படியான ஸ்தானங்களைப் பெற்றிருக்கிறது. எல்லா ஜாதி மக்களோடும் ஐக்கியமாக வாழ முடியும் என்பதை நிரூபிக்கும்படி அவர் தமது மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். இதர ஆபிரிக்கத் தலைவர்களைப் போலவே திரு. எம்போயாவும் காவலில் வைக்கப்பட்டுள்ள கென்யாட்டாவை விடுதலை செய்யும்படி வற்புறுத்தி வருகிறார். கருத்து வேறுபாடுடைய பல தலைவர்கள் கென்யாட்டா விடுதலை செய்யப்பட வேண்டுமென்பதில் ஒன்றுபட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றக் கென்யா கவர்னர் சேர் பாட்ரிக் ரெனிசன் கண்டிப்பாக மறுத்து வருகிறார். நாட்டின் நிர்வாகம் ஒரு நிலையடைந்ததும் கென்யாட்டா விடுதலை செய்யப்படுவார் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்த வாக்குறுதியைக் கவர்னர் நிறைவேற்றுவதாக இல்லை. கென்யாட்டா கிக்குயு இனமக்கள் தலைவர். அரசாங்கம் அமைக்க உதவுவதா இல்லையா என்பதுபற்றி கானு, காடு இனமக்

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாணவரின் மாபெரும் ஊர்வலத்தைக் கண்டு உணர்ச்சி மேலிட்ட "நிழ மறத்தமிழன்" என்ற அன்பர் மாணவர்களைப் பாராட்டி நீண்டதோர் கடிதம் எழுதியுள்ளார். அதை அப்படியே தருகிறேன். நீங்களும் படியுங்கள்:—

"தற்போது நம்பகுதியில் நடந்துகொண்டிருக்கும் சாத்விகப் போராட்டத்தில் இன்றே புனித நாள் என்பது என் கருத்து. கிட்டத்தட்ட பத்தாயிரம் மாணவர்கள் சத்தமின்றி, ஒழுங்காக சுலோகங்கள் பொறித்த அட்டையுடன் ஊர்வலமாகச் சென்றதைக் கண்ட யாருக்கும் மகிழ்ச்சியினால் கண்களில் நீர் நிரம்பி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எல்லோருமே இன்றைய ஊர்வலத்தைக் கண்ட பிறகு தலைநிமிர்ந்து நடக்கலாம். நமது மக்கள், நமது மாணவர்கள், இளம் சிறுர்கள் தாங்களாகவே எல்லாவித ஒழுங்குமுறைகளையும் செய்து மிகச்சிறந்தமுறையில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். நம் நாட்டின் எதிர்காலம் நல்ல கைகளில் தான் இருக்கின்றதென்பதில் சந்தேகமில்லை.

இன்று காலை இந்த இளம் சிறுவர்கள் ஊர்வலமாக வந்து தங்கள் தாய்மார்களைக் கச்சேரி வாசலடியில்வணங்கிச்சென்றுர்கள். தாய்மார்கள் அப்பொழுது தேவாரங்கள் பாடிக்கொண்டிருந்தனர். இந்நிலையில் எனக்கு ஏற்பட்ட பிரமை ஒன்று, தாய்மார்களின் பாடும் திறம், சாதீ[illegible] ரம், [illegible] ஓரள[illegible] தியத்[illegible]

தன் மகன் சான்ருேன் எனக் கேட்ட தாயைவிட, சான்ருேன் என்று கண்ட தாய் கூடிய மிதமடைவது இயல்புதானே! சத்தியாக்கிரகம் செய்துகொண்டிருந்த தாய்மார்களுக்கு தம் மக்களின் கட்டுப்பாடு, ஒழுங்குமுறை முதலியவை எவ்வளவு மனநிறைவை ஏற்படுத்தியிருக்கக் கூடும் என்பதை என்னுல் கற்பனையில் அறிய முடியும் ஆனுல் அனுபவிக்கமுடியாது. நான் ஆண்.

"தாய்மார்களே! உங்கள் மக்கள் இரத்தினங்கள். அவர்களுக்கு உணர்ச்சியுண்டு. அதை இந்த எதிர்ப்பு மூலம் காட்டினுர்கள். அறிவுத் திறனும் உண்டு. அதைச் சுலோகங்கள்மூலம் காட்டினுர்கள். கட்டுப்பாடும் ஒழுங்கும் ஒருங்கே அமையப்பெற்றவர். அதை நடத்தையில் காட்டினுர்கள்.

இத்தகைய இரத்தினங்களைப் பெற்றெடுத்த உங்களுக்கு அஞ்சலி. இவ்விரத்தினங்களுக்கு கல்வி பயில்விக்கும் ஆசிரியர்களுக்கும் எனது அஞ்சலி. கட்டுப்பாடும் ஒழுங்கும் இன்றியமையாதவை என்ற அவர்களின் போதனை முறையின் பயனுகவே இன்று இச்சிறுர்கள் சமூகத்துக்கே - நாட்டுக்கே பெருமை தேடித்தந்தார்கள்.

இவ்விளம் சிறுர்களுக்கும் எனது அஞ்சலி. நல்ல காரியத்தை ஒற்றுமையுடனும் கட்டுப்பாடுடனும் ஆரம்பித்து, நடத்தக் கூடியவர்கள் அவர்கள் என்பதை நிரூபித்துவிட்டார்கள்.

நாடு வளரும், கஷ்டங்கள் மறையும், வறுமை பெருகும் [illegible]தில் எனக்குச் சிறிதும் [illegible]யில்லை, நமது பெரும் [illegible]ாகிய இளம் [illegible]

இன்று நடந்து கொண்ட முறையைக் கண்டபிறகு."

* * *

அன்பரின் உணர்ச்சி மிக்க இக் கடிதத்தைப் படித்ததும் அந்த ஊர்வலத்தை நானும் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று பெரிய குறை மனதில் ஏற்பட்டது.

* * *

ஒரு வர்த்தக அன்பர் நேற்று ரூ. 1500க்கு 'செக்' எழுதி, அதை தலைவர் எஸ். ஜே. வி.யிடம் நேரில் கொடுத்தார். 'நன்றி' என்று சொல்லி அதைப் பெற்றுக் கொண்டார் தலைவர். பக்கத்திலிருந்த ஒரு சிறுவன், உடனே தன் சட்டைப் பையில் கைவிட்டு அதிலிருந்த 65 சதத்தை எடுத்து, தலைவரிடம் தன் காணிக்கையைக் கொடுத்தான்! தலைவருக்கு உணர்ச்சியை அடக்க முடியவில்லை. கண்களில் நீர் பெருக, அதை இரு கைகளாலும் வாங்கிக் கொண்டதாக நேரில் கண்ட ஓர் அன்பர் தெரிவித்தார்.

# தென்னுபிரிக்காவை ஒதுக்கி வைத்துவிட

## தீவிர முயற்சி

### காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு இன்று ஆரம்பம்

லண்டன், மார்ச். 7

இலங்கை பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்கா நேற்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக்மில்லனுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். லண்டனிலுள்ள அட்மிரால்டி மாளிகையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

காமன்வெல்த் பிரதமர்கள் மகா நாட்டுக்கு வந்திருக்கும் இதர நாடுகளின் தலைவர்களும் திரு. மாக்மில்லனுடன் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்கள்.

**காமன்வெல்த்தில் தெ. ஆபிரிக்கா**

காமன்வெல்த் அமைப்பில் தென்னுபிரிக்க அரசாங்கம் தொடர்ந்து அங்கம் வகிப்பதை அனுமதிப்பதா என்பதுபற்றி லண்டனுக்கு வந்திருக்கும் காமன்வெல்த் பெருந் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்கள்.

பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப்கான், மலாயா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், இலங்கைப் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா ஆகியவர்களும் இதர தலைவர்களும் தென்னுபிரிக்கா சம்பந்தமாக ஆலோசனை நடத்தினர்கள்.

இந்தியப் பிரதமமந்திரி திரு. நேரு புதன்கிழமை லண்டன் வந்து சேர்வார். அவர் நேற்று பம்பாயிலிருந்து விமான மார்க்கமாக லண்டனுக்குப் புறப்பட்டார்.

நியூஸிலாந்து பிரதமர் லண்டன் வந்து சேர்ந்ததும், இன ஒதுக்கலை நியூஸிலாந்து மக்கள் வெறுக்கிறுர்கள் என்றுர். இன ஒதுக்கல் பற்றியே பேசுவதற்கு தமக்கு ஆட்சேபனை இல்லையென்று கூறிய அவர் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் அப்பிரச்சினை கிளப்பப்பட்டால் தமது கருத்து என்னவாக இருக்கும் என்பதை வெளியிட மறுத்துவிட்டார். பிரதம மந்திரிகள் தனிப்பட்ட முறையில் மனம்விட்டுப் பேசவேண்டிய விஷயங்கள் பற்றி முன் கூட்டியே கருத்து வெளியிட்டால் அது மகாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதைப் பாதிக்கக்கூடுமென்று நியூஸிலாந்து பிரதமர் கூறினர்.

ஆவுஸ்திரேலியப் பிரதமர் திரு. மென்ஸீஸ் இனஒதுக்கல் சப்பந்தமான தமது கருத்தை வெளியிட மறுத்துவிட்டார்.

நாளை புதன்கிழமையன்று ஆரம்பமாகவிருக்கும் காமன்வெல்த் நாடுகளின் பெருந் தலைவர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த பல தலைவர்கள் ஏற்கனவே லண்டனுக்கு வந்துவிட்டார்கள்.

## இந்தியச் செய்திகள்

3-ம் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் 8,85,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் 7 மின்சாரத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். இவற்றில் தமிழ் நாட்டில் 3,40,000 கிலோவாட் உற்பத்தி செய்யும் திட்டங்கள் அடங்கும்.

ஃ ஃ ஃ

சென்ற ஆண்டு இந்தியாவில் 4,48,000 டன் செம்பு உற்பத்தி செய்யப்பட்டதால் அறிவிக்கப்படுகிறது

ஃ ஃ ஃ

1960-த் ஆண்டு புதிதாக 5600 கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலதனம் 288 கோடி ரூபாயாகும்.

ஃ ஃ ஃ

உத்தர பிரதேசத்தில் ரஸாயன உரத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கும் பொருட்டு இரண்டரை கோடி அமெரிக்க டாலர்களைக் கடனுக அளிக்க ஜப்பான் முன் வந்திருக்கிறது.

## இறைவனை பக்தியுடன் சேவித்தால் பேரின்பம் கிட்டுவது திண்ணம்

### ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் செய்தி

ஸ்ரீ சிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகள், சென்னையில் 8 மாத காலம் இருந்துவிட்டுப் புறப்பட்ட போது சென்னை மக்களுக்கு விடுத்துள்ள ஒரு செய்தியில் கூறுவதாவது:-

அடிக்கடி பிறப்பு, இறப்பு, மீண்டும் கர்ப்பவாசம் என்ற கரையற்ற சம்சாரமெனும் சமுத்திரத்தினின்று கடைத்தேறும் மார்க்கத்தை நாடவேண்டியதை ஒவ்வொருவரின் கடமையாகக் கருத வேண்டியது. இதில் முதற்படி, அனுபவிக்கத்தக்க பொருள்களின் மேல் ஆசையின்மை. மூச்சுக்கு மூச்சு நம்பிராணன் குறைந்து வருகிறது என்ற உண்மையை உணர்ந்தால் வைராக்கியம் ஏற்படும்.

தேகம் தளர்ந்து, தலை நரைத்து, பார்வை குறைந்து தள்ளாடும் சமயத்திலும் பற்றுகள் விடுவதில்லை.

சுவையில்லாத இகலோக வாழ்க்கைப் பற்றை விட்டு உமாபதியைத் தஞ்சமடைந்து பகவத் அனுக்கிரகத்துக்குப் பாத்திரமாக வேண்டும்.

இன்றைய லோக லௌகீக நிலையில், இங்க மனுேபாவம் ஏற்படுவது சாத்தியமா என்று கேட்கலாம்.

பகவான் ஒரு பெரிய தயா சமுத்திரம். சக்திக்கேற்றபடி முடிந்த அளவில் அன்ருடம் பசுபதியைத் தியானித்து உள்ளன்புடன் சரணுகதி பாவத்துடன் சேவித்து ஆராதித்தால் பேரின்பம் கிட்டி ஜன்ம சாபல்யம் ஏற்படுவது திண்ணம்.

நமக்கு எது நன்மை பயப்பது, அதனை எப்படிப் பெறுவது என்பவைகளே பலருக்குத் தெரியவில்லை. அஞ்ஞானமாகிய இருளை அகற்றும் வெண்ணிலாவான தேவி பரா

(6-ம் பக்கம் பார்க்க)

### ஆசிரியருக்குக் கடிதம்

## பிரதேச சுயாட்சி

ஸ்தல சுயாட்சி என்பது இந்நாட்டில் பூர்வகாலத்திலும் இருந்து வந்திருக்கின்றது. ஸ்தலத்திலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க, அங்குள்ள மக்களின் மொழி உதவுகிறது. இதைத்தான் தமிழ் மக்கள் கேட்கிறுர்கள். இதை "பிரதேச சுயாட்சி" என்று வேண்டுமாயினும் கூறலாம்.

நீர்ப்பாசனம், வரி வசூல், வரி விஸா, நீதிமன்றம் விதிக்கும் அபராதப் பணத்தை செலவிடுவது, கிராம சபையில், பணத்தைச் சேர்ப்பது ஆஸ்பத்திரி, குருடர், முடவர் விடுதிகள், வைத்தியர்கள், மிருகவைத்தியர்கள் நியமனம், பணப் பாதுகாப்பு, சமூக உழைப்பு மூலம் நீர்த்தேக்கம், வாய்க்கால் அமைத்தல் முதலிய பல விஷயங்களையும் ஆங்காங்குள்ள மக்களே நிர்வகித்து வந்ததற்கு பல அத்தாட்சிகளுண்டு. எல்லா மக்களுக்கும் ஆட்சி உரிமை வேண்டுமென்று தான் இலங்கையரனைவரும் போராடி, சுதந்திரத்தைப் பெற்ருேம்.

தமிழர் இப்போது பிரதேச சுயாட்சி வேண்டுமென்றும், தங்கள் மொழியைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்கின்றனர். இலங்கை மீது அந்நியர் பலர் படை எடுத்து ஆக்கிரமித்தால், தங்கள் சுரண்டல் காரணங்களுக்காக, பிரதேச சுயாட்சி முறையை நசுக்கிவிட்டனர்.

மாகாண சபைகள் வேண்டுமென்று டொனுமூர் கமிஷன் கூறியது,இச்சபைகளை அமைப்பதால், இப்போது நிலைமை அரசாங்கத்தின் நிர்வாக வேலையில் பெரும் பகுதி, ஆங்காங்கேயுள்ள மக்களின் கைகளுக்கே கிடைத்தது. அவர்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும்" என்று குறிப்பிட்டது. இந்த ஏற்பாட்டினுல், இப்போதுள்ள ஒற்றை ஆட்சி முறை மாறி, பிரதேச சுயாட்சி அல்லது சமஷ்டி முறை ஏற்படும். ஆனுல் சில சிங்கள அரசியல்வாதிகள் அதிகார வெறிகாரணமாக இதை எதிர்க்கிறுர்கள். இலங்கையை

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டாடியாவிலிருந்து ஐ. நா. துருப்புகள் வாபஸ்

### வலுத்தாக்குதலை சமாளிக்க முடியவில்லை

நியூயோர்க், மார்ச் 7

காங்கோவில் மட்டாடியா துறைமுகத்தில் காங்கோ துருப்புகளுடன் 24மணி நேரம் சண்டை செய்தபின் ஐ. நா. துருப்புகள் அங்கிருந்து லியப்போல்ட்வில்லிக்குத் திரும்பிவிட்டன.

மட்டாடியா துறைமுகத்தில் காங்கோ துருப்புகளின் எண்ணிக்கை மிக அதிகமாகவிருந்ததாகவும், அவர்களின் தாக்குதலை சமாளிக்கமுடியாமல் ஐ நா. துருப்புகள் அங்கிருந்து வேறிடத்துக்கு மாறியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

இது நற்காலிகமான ஒரு நடவடிக்கைதான் என்றும் மட்டாடியா துறைமுகத்தை மீண்டும் கைப்பற்ற தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் ஐ. நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார். காங்கோ துருப்புகளுக்குப் பின்னுல் பெல்ஜிய சக்திகள் செயல் படுவதாகக் கருதப்படுகிறது என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஐ. நா. படைகளை காங்கோ துருப்புகள் தாக்கியதைத் தொடர்ந்து ஐ. நா. படையைச் சேர்ந்த 9 கனடா வீரர் காணுமற் போனுர்கள். அவர்களில் 8 பேர் எதுவித அபாயமும் இன்றி திரும்பியிருப்பதாகவும் ஒருவரின் நிலை என்னவென்பது தெரியவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

**ரஷ்யா பகிஷ்காரம்**

நியூயோர்க் வந்திருக்கும் கானு ஜனுதிபதி நிக்ருமாவுக்கு ஐ. நா. பிரதம காரியதரிசி ஹமர்ஷீல்ட் அளித்த ஒரு உபசாரத்தில் கலந்து கொள்ளாமல் ஐ. நா. ரஷ்யப் பிரதிநிதியும், இதர கம்யூனிஸ்ட் நாடுகளின் பிரதிநிதிகளும் பகிஷ்காரம் நடத்தினுர்கள். ஹமர்ஷீல்டை ஐ. நா. பிரதம காரியதரிசியாக தொடர்ந்து அங்கீகரிப்பது முடியாத காரியம் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

**மகாநாடு ஒத்திவைப்பு**

காங்கோவில் அமைதியை நிலைநாட்டுவதற்காக மலபாசியில் காங்கோ தலைவர்கள் நடத்திய மகாநாடு ஒரு தந்திச் செய்தியைத் தொடர்ந்து 24 மணி நேரத்துக்கு பின்போடப்பட்டுள்ளது.

## 'தொண்டர்களுக்குப் பயந்தே குமாஸ்தாக்கள் வேலைக்கு வரவில்லை?

### அரசாங்கத்திற்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் அறிக்கை

யாழ்ப்பாணம, திங்கள்

யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள குமாஸ்தாக்கள், தாங்கள் வேலைக்குத் திரும்பத் தயாராய் இருப்பதாகத் தமக்குக் கடிதம் எழுதியிருக்கிறுர்கள் என்றும், ஆனுல் சத்தியாக்கிரகிகள் தங்களைத் தாக்கக்கூடும் என அஞ்சுவதாக அக்கடிதங்களில் அவர்கள் தெரிவித்துள்ளதாயும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நேற்று அரசாங்கத்துக்கனுப்பியுள்ள தகவலில் கூறியிருக்கிறுர். அத்யாவசிய சேவைகள், தந்திப் போக்குவரத்து ஆகியவற்றில் தன் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் நிலையில் இருப்பதாயும் அவர் கூறியிருக்கிறுர்.

**அரசாங்க அதிபர்**

அரசாங்க அதிபர் இரவு முழுதும் திரு. விஜேதாஸா, திரு. லீலானந்த டி' சில்வா ஆகியோருடன் கச்சேரியில் வேலை செய்துகொண்டிருந்தார். பிரதான வாசலைத் தவிர்த்து, வேறு வாசல்வழியாக எவரையும் சந்திக்க அதிபர் மறுத்துவிட்டார். சில குமாஸ்தாக்கள் தங்களுக்குப் பாதுகாப்பு அளித்தால் வேலைக்கு வருவதாகத் தெரிவித்திருந்தார்களென்றும், ஆனுல் அத்யாவசிய சேவையைத் தவிர்த்து வேறு விஷயத்தில் தன் அதிகாரத்தை உபயோகிக்க விரும்பவில்லை என அதிபர் கூறிவிட்டார் என்றும் அறிவிக்கப்பட்டது.

கச்சேரியின் பிரதான வாசலைத் தாமே திறப்பதற்கேதுவாக, பிற்பகல் அரசாங்க அதிபர், ராணுவத்தை அழைத்தார். ஆனுல் தனது சொந்தப் பாதுகாப்பையும் நாட்டில் அமைதியையும் முன்னிட்டு அவ்விதம் செய்யாமலிருக்கும்படி கர்னல் உடகம அவரைக் கேட்டுக்கொண்டார்.

கல்வி, விவசாயம், கலால், சாமான் குதங்கள், ஸ்தலஸ்தாபனம், காணி பதிவுக் கந்தோர் ஆகிய காரியாலயங்களில் மறியல் நடைபெற்றது. ஆனுல் தந்திப் போக்குவரத்து மேலதிகாரியின் காரியாலயம், மராமத்து ஆகிய காரியாலயங்களில் மறியல் அனுமதிக்கப்படவில்லை.

**மன்னுர் எம். பி. யும் சத்தியாக்கிரகம்**

மன்னுர் எம். பி. திரு. அழகக்கோன் நேற்றிரவு சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டார்.


## வெளிவந்துவிட்டது

### 'பாரதிபாடல்கள் உரைவிளக்கம்'

1962-1964 G. C. E. பரீக்ஷைக்குரிய தமிழிலக்கியபாடத்துக்கு பாரதிபாடல்களிலிருந்து தெரியப்பட்டபகுதிகளை மட்டும் ஒன்ருகக் கோத்து அரும்பதக் குறிப்பும் உரை விளக்கமும் சேர்ந்த நூல்.

தகுந்த ஓர் ஆசான் உடன் நின்று பாடல்களின் உட்பொதிந்த பொருளையும் பாரதியாரின் சிந்தனைச் சிறப்பையும் மாணவர்களுக்கு எடுத்தியம்புவது போல இந்நூல் துணை செய்யும் என்பது எ து நம்பிக்கை.

**விலை சதம் 90**

**சண்முகநாதன் புத்தகசாலை,**

யாழ்ப்பாணம்.

Advt 49

## வரிவிளம்பரம்


**யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழா 1961 பின்போடப்பட்டது**

இம்மாதம் 10-3-61 வெள்ளிக்கிழமை நடைபெற விருந்த யாழ்ப்பாணக் கல்லூரி ஆண்டுப் பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் காலவரையறை இன்றிப் பின்போடப்பட்டுள்ளது.

கே. ஏ. செல்லையா
கல்லூரி அதிபர்

Advt. 48


## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

புதன் 8-3-61

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00) காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 7-30 திரை இசை 8-15 இஸ்லாமிய கீதங்கள்

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 இளைஞர் மன்றம் 5-45 திரை இசை* 6-15 பாங்கு 6-30 கிராமசஞ்சிகை

இரவு 7-00 நேயர் விருப்பம் 8-00 எம். ஆர். கோவிந்தராஜா - பாட்டு 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 10-00 கானமஞ்சரி

* செங்கடகல உபநிலையத்தில் அஞ்சல்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 7-30 பி. ஆர். எஸ். மணி - புல்லாங்குழல்

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 12-30 நடுத்தரப் பள்ளிக்கு 1-00 பெண்ணுலகம் 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 6-15 கிராம நிகழ்ச்சிகள்

இரவு 7-30 சென்னை அஞ்சல் 8-00 பி. ஆர். எஸ் மணி - புல்லாங்குழல் 8-30 திரைப்பட இசை 9-15 நல்லுரை 9-20 மேளதாளம்: லயவின்யாசம் 9-50 இசைமாலை

## இது கட்சிப் போராட்டமல்ல

மாவிட்டபுரம் செவ்வாய்

"இன்று நடைபெறும் போராட்டம் ஒரு கட்சிப் போராட்டம் என்று பிரதமர் தமது அறிக்கையில் கூறியிருக்கிறார். இது தவறு என்பதை எடுத்துக் காட்டவும் தமிழ் மக்களின் ஒரு மனதான உரிமைப் போராட்டம் இது என்பதை உணர்த்தவும் கிராமச் சங்கங்கள், பட்டின சங்கங்கள் சனசமூக நிலையங்கள், வாசகசாலைகள் ஆதியன அரசாங்கத்துக்குத் தந்தி மூலம் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொள்ளும் அறிக்கைகளை சங்கானைக் கிராமச் சங்கமும், மயிலிட்டி கிராமச் சங்கமும் விடுத்துள்ளனர்.

### மாவட்டபுரம்பாடசாலைகள்

மாவிட்டபுரம் திங்கள்

மாவிட்டபுரத்தில் பாடசாலைகள் யாவும் இன்று மூடப்பட்டிருந்தன. சில பாடசாலைகளின் முன்பாகக் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. "பட்டாளம் இங்கிருந்து செல்லும்வரை பாடசாலை செல்லாதே" என்ற சுலோக அட்டைகளும் காணப்பட்டன. போதிய பிள்ளைகள் வராத காரணத்தால் பாடசாலைகளை நடத்த முடியவில்லை என்று பாடசாலைத் தலைமையாசிரியர்கள் கல்விப் பகுதிக்குத் தெரிவித்துள்ளார்கள்.

# மட்டக்களப்பிலும் பங்கீட்டு அரிசிக்குத்தடை?

## 'கச்சேரி வேலைகள் வெளியில் நடைபெற முடியாது'

—அரசாங்க அதிபர்

மட்டக்களப்பு செவ்வாய்

"மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெற்ற வேலைகள் எதுவும் வெளியில் நடைபெறக் கூடாதென்பதே அரசாங்கத்தின் உத்தரவு" என்று மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. டி. விபானகே அறிவித்தார்.

அரசாங்கஅதிபர்கூட்டிய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டிலேயே இதை அவர் அறிவித்தார்.

கச்சேரி ஊழியர்களின் சம்பளம், தர்மப்பணம், காசநோயாளர் உதவிப்படி, உப்பு, லைசன்ஸ் வழங்குவதுபோன்ற அலுவல்களும் பங்கீட்டரிசிவினியோகத்திற்கான அனுமதிச் சீட்டுப்பெறும் அலுவல்களும் கச்சேரிக்குள்ளேயே நடைபெற்று வந்தன.

இது மட்டக்களப்புப் பகுதியில் நெல் அறுவடைகாலம். உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் நெல் விற்பனை செய்வதும் இன்றய நிலையில் சாத்தியம் இல்லையென்று அரசாங்க அதிபர் கூறினார். வருடா வருடம் சுமார் இரண்டரை கோடி ரூபாய்க்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அரசாங்கம் நெல் கொள்வனவு செய்வதுண்டாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உப உணவுப் பொருள்களுக்கு விலைக் கட்டுப்பாட்டுத் திட்டம் கொண்டுவரப்படுமா? என்று நிருபர்கள் கேட்டபொழுது அதுபற்றி தாம் ஆலோசிப்பதாக அவர் கூறினர்.

### பின் வாசலால் போகமாட்டேன்

கச்சேரியின் பின் புற வாசல் வழியாக உள்ளே ஊழியர்களைக் கொண்டு செல்ல முயற்சி செய்ததாகக் கூறப்படும் செய்தி உண்மைதானா? என்று ஒரு நிருபர் கேட்டதற்கு "பின்புற வாசல்வழியாகச் செல்லும் நோக்கம் எனக்கு இல்லை" என்று அரசாங்க அதிபர் பதிலளித்தார்.

அசம்பாவிதம் எதுவுமில்லாமல் தடுத்து நிறுத்துவதே தமது நோக்கம் என்றும் பொலிசும் இராணுவமும் இதற்காகவே உபயோகப்படுத்தப் படுகிறதென்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நிருபர்கள் மகாநாட்டில் பொலிஸ் சுப்ரின்டெண்டும் கர்னர் இராசநாயகாவும் சமுகமளித்திருந்தனர்.

### மறியல் இயக்கம்

கச்சேரி வாசல்களில் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் இரவு பகலாக மறியல் செய்து வருகிறார்கள்.

மட்டக்களப்பு வாவியில் தோணிகளிலும் தொண்டர்கள் அமர்ந்து கச்சேரிப் பின் புற வாசலுக்கு அரசாங்க ஊழியர் வராதபடி மறியல் செய்து வருகின்றனர்.

## பருத்தி : உத்தரவாத விலை

கொழும்பு

உள்நாட்டில் உற்பத்தியாகும் பருத்திக்கான உத்தரவாத விலையொன்றை விவசாய மந்திரி திரு. சி. பி. டி. சில்வாவால் நியமிக்கபபட்ட குழு சிபாரிசு செய்திருக்கிறது.

## ஜபல்பூர் கலகம்: கமிஷன் நியமனம்

புதுடில்லி திங்கள்

ஜபல்பூரில் நடைபெற்ற கலவரங்கள் சம்பந்தமாய் விசாரணை நடத்த ஒரு நீதிபதியைக் கொண்ட கமிஷன் நியமிக்கப்படுமென அறிவிக்கப் பட்டிருக்கிறது.

திருக்கோணமலையில்:

## பொலிஸ் நிலையத்தை நோக்கிச்சென்ற மாணவர்

### எம். பி.க்கள் தடுத்தனர் 3 மாணவர் கைதாகி விடுதலை

திருக்கோணமலை, செவ்வாய்

திருக்கோணமலையில் சத்தியாக்கிரக இயக்கம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பெருந்தொகையான தொண்டர்களும் ஆயிரக் கணக்கான மக்களும் தமிழ் உரிமைப் போராட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

### மாணவர் ஊர்வலம்

மூன்று மாணவர்களைப் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். இச்செய்தி கிடைத்ததும் இன்று காலை சுமார் 500 மாணவர்கள் சுலோகங்களைக் கோஷித்துக்கொண்டுபொலிஸ் நிலையத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

திருக்கோணமலை எம். பி. திரு. என். ஆர். இராஜவரோதயமும் மூதூர் முதலாவது எம். பி. திரு. த. ஏகாம்பரமும் வழியில் மாணவர்களைத் தடுத்து நிறுத்தி, பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட மாணவர்களை விடுதலை செய்து தருவதாக உறுதியளித்து அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டனர்.

இதன்பின் பொலிஸ் அதிகாரிகளை இரு எம். பி. க்களும் சந்தித்துப் பேசியதன்பயனாக மூன்று மாணவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

பொலிஸ் நிலையத்திலிருந்து மாணவர்கள் மூவரும் வெளியே வந்ததும் இதர மாணவர்கள் அவர்களுக்கு மாலைகள் சூட்டி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அழைத்துச் சென்றனர்.

## பிரதேச சுயாட்சி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள பௌத்த நாடாக்க அவர்கள் எண்ணம்.

இதனை உணர்ந்து தமிழரின் நல உரிமைகளைக்காக்க தமிழரசுக் கட்சி 1952-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்றது. சமாதானப் பேச்சுகள் மூலம் பிரச்சினையை தீர்க்க முடியாது போகவே, சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பிக்கப் படவேண்டியதுபற்றி இந்தியாவில் மகாத்மா காந்தி தலைமையில் இது வெற்றிகரமாக நடைபெற்றது.

1940-ம் வருடம் அரசாங்க சபையும் 'மாகாண சபை' களை ஒப்புக்கொண்டு ஒரு தீர்மானம் செய்தது குறிப்பிடத்தக்கது. அகில இலங்கை கிராமச்சங்க மகாநாடு, அ. இ. பட்டின சங்கம், பட்டின சபை சங்கங்கள், மாநகரசபை சங்கங்களும் 'சோக்ஸி கமிஷன்' முன்பாக, பிரதேச சபைகளை அமைப்பதை பலமாக ஆதரித்தன. பிரதேச சபைகள் அமைப்பதற்கு மிகப் பெரிய ஆதரவு கிடைத்ததாக ஷொக்ஸி கமிஷனும் அறிவித்தது. பிரதேச சபை அமைப்பு என்பது, தமிழ்ப் பகுதிகளில் தமிழ் மொழியை உபயோகிப்பதென்பதாகவே இருக்கும். யுத்தம் முதலிய காரணங்களால் இவ்விஷயம் தடைபட்டுவிட்டது.

சுருங்கக் கூறின், தமிழர் மானத்துடன் வாழவே போராடுகிறார்கள். அதாவது தங்கள் சொந்த நாட்டில் முதல்தர பிரஜைகளாக இருக்கவே, சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உடுப்பிட்டி, வவனியா, யாழ்ப்பாண எம். பி. க்களும் அரசியல் வேறுபாடுகள் இருப்பினும், இந்த இயக்கத்தில் சேர்ந்து ஆதரித்துள்ளது பாராட்டத்தக்கது.

எஸ். வைத்தியலிங்கம்.
தொல்புரம்.


# தண்ணீர் விநியோகத்திற்கு "அல்கத்தீன்" பைப்



பி. எஸ். எஸ். 1972; 1953

தேய்வை எதிர்க்க வல்லது
செதில்களாகப் பெயராது
நிறுவுவது எளிது

500 அடி வரை நீளமுள்ள துண்டுகள் கிடைக்கின்றன.

பிரிட்டிஷ் திட்ட அளவுப் பிரகாரம் இப்பொழுது இலங்கையில் உற்பத்தி யாக்கப்படுகின்றது.

"அல்கத்தீன்" பைப் கீழ்கண்ட வியாபார ஸ்தாபனங்களில் கிடைக்கிறது:

● வாக்கர் அன்ட் க்ரைக் லிமிடெட்டும் கிளை ஸ்தாபனங்களும். ● ப்ரெனஸ் அன்ட் கோ. லிமிடெட்டும் கிளை ஸ்தாபனங்களும். ● கார்டோஸா ஸ்டோஸ், நுவரலியா. ● கண்ணன் அன்ட் கம்பெனி, பண்டாரவளை. ● பண்டாரவளை பரேஜ் ஸ்டோஸ், பண்டாரவளை. ● எ. ஸி. எச். முத்தலிப், 119, பிரின்ஸ் ஸ்றீட், புறக்கோட்டை. ● பக்கீர் சாய்பு அன்ட் சன்ஸ், பதுளை. ● நேஷனல் ட்ரேடிங் கோப்பரேஷன், கண்டி. ● எஸ்டேட் சப்ளைஸ், கண்டி. ● சாமுவேல் அன்ட் சன்ஸும் கிளை ஸ்தாபனங்களும். ● சென். அன்தோனி ஹாட்வெயா ஸ்டோஸும் கிளை ஸ்தாபனங்களும். ● உப்பாலி ஸ்டோஸ், மாத்தளை. ● டப்ளியு. எம். சலீ, காலி.

ICI

"அல்கத்தீன்" ஐ.ஸி.ஐ. பொலித்தீனுக்கு அளிக்கும் வியாபாரப்பெயர்.

இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (எக்ஸ்போட்) லிமிடெட்.
(இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் டின் துணைக் கம்பெனி. இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
தபாற் பெட்டி 352, கொழும்பு.

# சத்தியாக்கிரகத்தில்சேரும் ‘ஆசிரியர்கள்மீது கடும் நடவடிக்கை’

கொழும்பு, செவ்வாய்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள்மீது எடுக்கப்படும் நடவடிக்கை வேலை நீக்கம் செய்வதற்குக்கூட வழி வகுக்கும் என்று கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எச். ஜினதாசா வித்தியாதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

சத்தியாக்கிரக இயக்கத்தில் பங்குபற்றும் அரசினர் பாடசாலை ஆசிரியர்களை கல்வி அமைச்சர் பதியுதீன் மாமூத் சமீபத்தில் எச்சரித்திருந்தார். சத்தியாக்கிரக இயக்கத்தில் ஆசிரியர்கள் ஈடுபடுவது சட்ட விரோதமென்றும் கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

## கிழக்குமாகாணத்துக்கு நீர்வேலி வாழைப்பழம்

கோப்பாய், செவ்வாய்

கிழக்கு மாகாணத்தில் இப்பொழுது நடைபெற்றுவரும் மறியல் இயக்கத்தில் ஈடுபட்டுள்ள தொண்டர்களுக்கு இங்கிருந்து ஒரு லொறி நிறைந்த வாழைப்பழக் குலைகளை அனுப்பிவைக்கப் பொதுமக்கள் முயற்சிசெய்கின்றனர்.

வாழைக்குப் புகழ்பெற்ற யாழ்ப்பாணத்து நீர்வேலி மக்களே இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு லொறிப் பாரத்துக்கு மேல் வாழைப்பழக் குலைகள் கிடைத்திருப்பதாகவும் இவற்றை இன்று கிழக்குமாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்படுமென்றும் தெரிகிறது.

## அரசியல் நெருக்கடி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தலைவர்கள் முடிவு செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

### முதல் பிரதமர் யார்?

ஜோமோ கென்யாட்டா தான் முதல் பிரதம மந்திரியாகவிருக்க வேண்டுமென்பதில் கென்யாவில் அரசியல் கட்சிகளுக்கிடையில் கருத்து வேற்றுமையில்லை. புதிய சட்டசபையில் இருக்கப் போகும் தீவிர ஐரோப்பியர்களைத் தவிர ஆபிரிக்கர் அல்லாத மற்ற எல்லாரும் கென்யாட்டா விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கருத்துக் கொண்டுள்ளனர். ஆனால் ‘மாவ்மாவ்’ இயக்கத்தை முறியடிக்க உதவி செய்த ஆபிரிக்கர்கள் மீது கென்யாட்டா பழி தீர்த்துக் கொள்ளக் கூடும் என்று அச்சம் நிலவுகிறது. எனவே, அவர்களின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும், கென்யாட்டா விடுதலையாவதினால் எதுவித ஆபத்தும் ஏற்படமாட்டாது என்பதற்குப் பெரும்பான்மையான மக்கள் பலத்தையுடையவர்கள் உறுதி கூறித் திருப்தி செய்ய வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

நிலைமை இவ்வாருக்கறிக அடுத்தசில தினங்களுக்குள் கென்யாட்டா விடுதலை செய்யப்படாத நிலைமையில், அரசாங்கம் அமைப்பதற்கு கவர்னருடன் ஆபிரிக்கர்கள் ஒத்துழைக்கப் போகிறார்களா இல்லையா என்பது தெளிவாகிவிடலாம்.

### சுபீட்சம் ஏற்பட வழி

அந்த நாட்டில் சுதந்திரமும் அமைதியும், சுபீட்சமும் ஏற்பட வேண்டுமானால் ஜாதி நெருக்கடிகளும், இனப போராட்டங்களும் ஒழிய வேண்டியது அவசியமாகும். பிரிட்டிஷ் அரசாங்கமும் கென்யாட்டாவின்மீது விதித்திருந்த கட்டுப்பாடுகளைச் சிறிது தளர்த்தியிருக்கிறது. அவரை அதிகமானவர்கள் சென்று பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

## மந்திரி காலமானார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மயானத்தில் மும்முறை ராணுவ வேட்டுக்கள் தீர்கப்பட்டதைத் தொடர்ந்து சடலம் தீ மூட்டப்பட்டது. அதற்கு முன் வாசஸ்தலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

பண்டிதபந்தின்மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக நாடு முழுதும் ஒருவார காலம் துக்கம் கொண்டாட வேண்டுமென்று மத்திய அரசாங்கம் அறிவித்தது. அரசாங்க தரப்பில் நடக்கவிருந்த கேளிக்கைகள் எல்லாம் ரத்து செய்யப்பட்டன.

ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத் வெளியிட்ட அனுதாபச் செய்தியில் நாட்டின் மாபெரும் தூணைகவும் மேன்மைக்கு வழிகாட்டியாகவுமிருந்த ஒரு நந்தாவிளக்கு அணைந்து விட்டது என்று குறிப்பிட்டுள்ளார் இன்று காலை ஜனாதிபதியும் உபஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும் மீண்டும் பண்டித பந்தின் வாசஸ்தலத்துக்குச் சென்று மலர்வளையங்களை வைத்து மரியாதை செலுத்தினர்.

பண்டித பந்தின் மரணச் செய்தி கிடைத்ததும் பார்லிமெண்டின் இரு சபைகளும் ஒத்திவைக்கப்பட்டன. லோக் சபையிலும் ராஜ்யசபையிலும் பல அங்கத்தவர்கள் பண்டித பந்தின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தனர். தமிழ் நாட்டில் பந்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக சட்டசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. பண்டித பந்தின் மறைவு இந்தியாவுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம் என்று தமிழ் நாடு முதன் மந்திரி காமராஜ் கூறியுள்ளார். நாடு முழுதும் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

### வாழ்க்கை

பண்டித பந்த் 1887-ல் உத்தரப்பிரதேசத்தில் பிறந்தார். 22 வயதில் உயர்தர நீதிமன்ற வழக்கறிஞராகத் தொழில் ஆரம்பித்தார். சுதந்திரப் போராட்ட முன்னணி வீரர்களில் ஒருவராய்த் திகழ்ந்த அவர் பன்முறை சிறை சென்றார். தடியடியினால் படுகாயம் அடைந்தார். 1937ல் அவர் உத்தரபிரதேச முதல் மந்திரியானார். விவாதத்திறமை, பார்லிமெண்டரி திறமை, நிர்வாகத் திறமை ஆகியவற்றில் தனக்கே உரிய சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தார் பந்த். நேற்றிரவு 8-30, 9-30 மணிக்கு அகில இந்திய ரேடியோ பந்தின் வாழ்க்கை பற்றி விசேஷ ஒலிபரப்புகளை நிகழ்த்தியது.

## கன்னியாகுமரி அபிவிருத்தி செய்யப்படும்

சென்னை மார்ச்,7

3ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கன்னியாகுமரியை ஒரு யாத்திரை ஸ்தலமாக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

## தமிழர் பொருளாதார முன்னணி

கோப்பாய், புதன்

கோப்பாய், இளைஞர் விவசாயக் கழகத்தின் ஆதரவில் “தமிழர் பொருளாதார முன்னணி” இயக்கத்தை திரு. எஸ். பொன்னையா ஆரம்பித்து வைத்தார். சாதி சமய வேறுபாடின்றி சுயநலமற்று இதில் உழைப்பதால் தமிழரின் பிரச்னை தானே தீர்ந்துவிடுமென்றார்.

திருவாளர்கள்: எஸ். சரவணமுத்து, டி. சிவஞானம், வி. எஸ். செல்வரத்தினம், டி. இரத்தினசிங்கம் இவர்களும் பேசினர்.

## சத்தியாக்கிரகிகளுக்கு மாநகரசபை சேவை

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன் சத்தியாக்கிரகம் செய்யும் தொண்டர்களுக்கு யாழ்ப்பாண மேயர் குடி தண்ணீர் போன்ற பல வசதிகளைச் செய்துள்ளார். இரவில் தொண்டர்கள் இருக்குமிடம் மின்சார ஒளியுடன் பிரகாசிக்கின்றது. பகலில் தகிக்கும் தார் றோட்டின் வெப்பத்தைத் தணிக்கத் தண்ணீர் ஊற்றும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

பார்வையாளர்களுக்காகத் தேர்தல் உதவி அதிகாரியின் காரியாலயத்தின் முன்பாக இடம் ஒதுக்கப்பட்டுளளது.

## யாழ்ப்பாணத்தில் தொழிலாளரின் அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், புதன்

ஆயுதப்படைகளின் செயலைக் கண்டித்தும், தமிழ்மொழி உரிமைப் போராட்டம் நடத்தும் சத்தியாக்கிரகிகளுக்கு அனுதாபம் தெரிவித்தும் யாழ்ப்பாணத்திலுள்ள சுருட்டுத் தொழிலாளர், நகரசுத்தித் தொழிலாளர், பஸ் தொழிலாளர் ஆகியோர் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வதுபற்றி ஆலோசனை செய்துவருவதாகத் தெரிகிறது.

இதுபற்றி திரு. ஆ. துரைராஜசிங்கத்திடம் கேட்டபொழுது ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் நடைபெறலாமென்றும் ஆனல் எப்பொழுது நடத்துவதென்று இன்னும் முடிவு செய்யப்படவில்லையெனவும் தெரிவித்தார்.

## சி. பி. டி. சில்வா மகாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளுக்கும் விஜயம்செய்து அரசாங்க அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு தான் சென்றிருந்த விமானத்திலேயே அதிபர்களை அழைத்துக்கொண்டு கொழும்புக்குச் சென்றார்.

மகாநாடு முடிந்ததும் அரசாங்க அதிபர்கள் தமது பகுதிகளுக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரிசி விநியோகம் செய்யும் ஏற்பாடுகள் சம்பந்தமாக மாகாண அதிபர்களுடன் திரு. சில்வா முக்கியமான பேச்சுக்களை நடத்தியதாகவும் தெரிகிறது.

## இ. த. மாணவர் காங்கிரஸ்

இலங்கை தமிழ் மாணவர் காங்கிரஸ் தலைவர் திரு. என். சிவநேசன் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் மாணவர்கள் சத்தியாக்கிரக இயக்கத்தில் இப்போது கலந்து கொள்வது நல்லதல்லவென்றும் கல்லூரிகளிலிருந்து இராணுவங்கள் வெளியேற வேண்டுமென்றும், கல்லூரிகளுக்கு மாணவர்கள் திரும்ப வேண்டுமென்றும், ஓய்வு நேரத்தில் வீட்டிலிருந்து பயனுள்ள காரியங்களைச் செய்யவேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

## புதிய ரக பால் நிலையம் திறப்பு

கொழும்பு.மார்ச்7.

தேசீய பால் சபை, நாளை பிற்பகல் மருதானையில் புதிய ரகமான பால் சப்ளை நிலையமொன்றைத் திறக்க ஏற்பாடு செய்திருக்கிறது.

## 5000 ஏக்கரில் கிழங்கு சாகுபடி

கொழும் மாச்சு 7

5000 ஏக்கர் நிலத்தில் உருளைக் கிழக்கு, பம்பாய் வெங்காயம் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கான ஏற்பாடுகள் விவசாய, காணி அபிவிருத்தி மந்திரி திரு. ஸி. பி. டி’ சில்வாவின் உத்தரவின் மீது நடைபெற்றுவருகின்றன.

## நீதி மந்திரி இன்று வருகிறார்?

யாழ்ப்பாணம் புதன்.

நீதிமந்திரி செனட்டர் சாம் பி. ஸி. பெர்னண்டோ இன்று காலை மேணிக்கு யாழ்ப்பாணம் வந்துசேர்வாரென அறியப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் சத்தியாக்கிரக இயக்கம்பற்றி அறிந்து செல்வதற்காக வருவதாகக் கருதப்படும் நீதிமந்திரி, கச்சேரியில் அலுவல்கள் நடைபெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்காகவே வருவதாகத் தெரிகிறது. நீதிமந்திரி யாழ்ப்பாணம் வரும்போது அவருக்குத் தமிழ்ப் பேசும் மக்கள் விமான நிலயத்திலும் கச்சேரிப் பகுதியிலும் கூடி நின்று கறுப்புக்கொடி காட்டி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வார்களெனத் தெரிய வருகிறது.

## பல்கலைக்கழகத் தேர்வு

இலங்கைப் பல்கலைக்கழகப் பொறியியல் பகுதிப் புகுமுக வகுப்பு பரீட்சையில் யாழ்ப்பாண இந்துக்கல்லூரியிலிருந்து பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

க, அமிர்தலிங்கம், க. ஞானலிங்கம், கதிர்காமநாதன், க. பரமேசுவரன், தி பொன்னுத்துரை, க. ரவீந்திரன், ராமச்சந்திரன், தி. சகாதேவன், இ. சிவானந்தன், ந. சிவசராசராம், ச. சோமசுந்தரம், ம. சுந்தரேசுவரன், வீ. சுப்பிரமணியம், ச. திலலையம்பலம், இ. திருநாவுக்கரசு, ச, வள்ளிகாந்தன், க. விஜயரத்தின.





ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட்

116/118 கெய்சர் வீதி, : : கொழும்பு.

# அடக்கி ஆள முடியாது

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஒரு தேசத்தை இன்னொரு தேசம் தனது ஆயுதப் பலத்தாலோ அரசியல் துரோகத்தாலோ கைப்பற்ற முடியுமென்பதைத்தான் இரண்டாயிரம் வருட சரித்திரம் எங்களுக்குக் கற்பித்துக் கொடுத்துள்ளது. **ஆனல் ஒரு தேசமோ சமூகமோ மற்றெரு தேசத்தின் அல்லது சமூகத்தின் சம்மதம் இல்லாமல் அதை ஆள முடியாது.**

### மக்களின் மனவலிமை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் நடைபெறவில்லையென்பதை பிரதம மந்திரியே ஒப்புக்கொண்டுவிட்டார். வேறு வார்த்தையில் சொன்னல், வடக்கு கிழக்கு மாகாணங்களின் தமிழ்ப் பேசும் மக்களின் மனவலிமையினல் அந்தப் பகுதிகளில் இலங்கை அரசாங்கம் செயல்பட முடியாமல்போய்விட்டதென்பதுதான் அர்த்தம்.

எங்கள் இலங்கைத் தீவின் சரித்திரத்திலேயே முன்னெப்பொழுதும் இல்லாதவாறு மக்களின் அரசியல் எழுச்சியை இன்று நாம் காண்கிறேம். இது போன்ற எழுச்சி இன்று உலகில் வேறெந்தப் பகுதியிலும் இவ்வளவு தீவிரமாகவும் உக்கிரமாகவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

இந்த இயக்கம் இலங்கை அரசாங்கத்தைச் செயல்பட முடியாமல் செய்திருக்கிறது. சுதந்திரத்திற்காகவும் சுயமரியாதைக்காகவும் நடைபெறும் இப்போராட்டத்தில் சகல தியாகத்துக்கும் தமிழ் பேசும் மக்கள் தயாராக இருக்கிறர்கள். பொலிசின் முரட்டுத்தனத்துக்கோ கடற்படையின் கைவரிசைக்கோ, இராணுவத்தின் தாக்குதலுக்கோ அவர்கள் பணிந்துவிடவில்லை. சிறிமா அரசாங்கம் கையாள்வதற்கு இனியும் வேறு உபாயங்கள் இல்லை. எனவே, யாழ்ப்பாணத்தில் சிங்க 'டச்சுக் கோட்டை'யாக மாற்றக்கூடிய, முழுக்க முழுக்க 'சிங்களம் மட்டும்' கச்சேரியை அமைத்து, பதினேழாம், பதினெட்டாம் நூற்றுண்டுகளின் கொடுமையான காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்த அவர்கள் திட்டமிடுகிறர்கள்.

இது இன்று முழுத் தோல்வியை ஒப்புக்கொள்வதாகும். இன்றைய யுகத்தில் இக்கொள்கை முழுத் தோல்வியடையும்; தோல்வியடைந்தே தீரும்.

### ஒழுங்கீனம்

இராணுவத்தையும், கடற்படையையும் ஒழுங்கீனமான முறையில் இந்த அரசாங்கம் உபயோகிப்பதைப்பற்றியும் ஒரு வார்த்தை சொல்லவேண்டும்.

அத்தியாவசிய சேவைகளை நிலைநாட்டுவதற்கு அரசாங்க அதிகாரிகளுக்கு உதவியளிப்பதற்குமட்டும் உபயோகிக்கலாம் என்ற இராணுவச் சட்டத்தின் 23 வது பிரிவின்படி இராணுவம் அழைக்கப்பட்டிருந்தபோதிலும், இலங்கையின் ஆயுதப் படைகள் முழுவதும் இப்பொழுது தமிழ்ப் பகுதிகளிலேயே 'படையெடுத்தது போல், முகாமிட்டுள்ளன.

ஆனல் இராணுவச் சட்டத்தின் 23 வது பிரிவுக்குமாருக இந்த நாட்டின் தமிழ்ப் பேசும் பிரஜைகளையும், நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகளையும் சரணகதியடையச் செய்யும் முயற்சியாக, ஏகாதிபத்திய இராணுவம்போல், பகிரங்கமாகவும் மூர்க்கத்தனமாகவும் தங்கள் ஆயுதங்களால் தாக்குவதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

ஆனல் இராணுவத்தினதும், கடற்படையினதும் இந்தச் சட்டவிரோதமான அடக்குமுறை நடவடிக்கைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆண், பெண், குழந்தைகளின் உணர்ச்சிகளைக்கூட முறியடிக்க முடியாமல் தோல்வியடைந்தது.

யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் சிங்கள மக்கள் ஆதரவும் அனுதாபமும் தெரிவித்திருப்பதுடன் எங்கள் விடுதலைக்கும் நீதிக்காகவும் நாங்கள் நடத்தும் அறப்போரில் பலர் வெளிப்படையாகவே கலந்துகொண்டுமுள்ளனர் என்பதை நான் தெரிவிக்க வேண்டியது எனது கடமை.

### கிழிந்த வேட்டி

அரசாங்க உயர்தர அதிகாரி ஒருவர்மீது பார்லிமெண்ட் அங்கத்தவர் ஒருவர் பலாத்காரம் பிரயோகித்ததாகவும் அந்த அதிகாரியின் கிழிந்த வேட்டியையும் சட்டையையும் தான் பார்த்ததாகவும் பிரதமர் தமது செய்தியில் குறிப்பிட்டிருந்தார். இது முழுப் பொய். அந்த அதிகாரியை பொலிசார் சத்தியாக்கிரகிகளின் தலைக்கு மேலால் இழுத்தும் தள்ளியும் தூக்கியும் இழுபறிப்பட்டதால் 'பொலிசாரின் நடவடிக்கை காரணமாகவே' வேட்டி கிழிந்தது. அந்த அதிகாரி நடந்துகொண்ட முறையில் அவரது காலணி எனது சட்டையைக் கிழித்ததுடன் தோலையும் உராஞ்சிவிட்டது.

திருமதி பண்டாரநாயக்கா தமிழ்த் தாய்மார்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். ஆனல் ஏவரது உத்தரவின்மேல் இராணுவம் நடந்துகொண்ட முறையானது பெருந்தொகையான தாய்மார்களைத் தங்களது உரிமை, தன்மானப் போராட்டத்திற்கு அழைத்துள்ளது.

'உரிமைகளைத் தமிழில் எழுதுவது உட்பட தனிப்பட்ட அலுவல்களைத் தமிழில் நடத்தவும் நூற்றுக்கு நூறுவீதம் தமிழர் உள்ள இடங்களிலுள்ள கிராமச் சங்கங்கள் தமிழ்மொழியிலேயே கருமமாற்றவும் (அவர்கள் வேறுமொழியில் பேசமாட்டார்களே) முடியுமென திருமதி பண்டாரநாயக்கா தயாள உள்ளத்தோடு கூறியிருக்கிறர்!

ஆனல் இச்சலுகைகள் சட்ட நடவடிக்கைகளைக் கையாளும் சிங்கள மந்திரியிடமிருந்து எழுத்துமூலம் அனுமதிபெற்றே செய்யவேண்டும் என்பது எமது புத்திக் கூர்மையை அவமானப்படுத்துவதாயும், திருமதி பண்டாரநாயக்கா நிலையை உணரக்கூடிய சக்தியின் பிரதிபலிப்பாகவும் உள்ளது.

## உதவி அரசாங்க அதிபர் மாற்றம்

யாழ்ப்பாணம், புதன்.

யாழ்ப்பாண அரசாங்க உதவி அதிபர் திரு. ஏ. ரி. மூர்த்தி கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளாரென அறியப்படுகிறது.

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி எப்பொழுதும் பக்தனுக்கு அருள் புரியக் காத்துக்கொண்டிருக்கிருள். அவள் லோகமாதா. யாவருக்கும் அன்னை என்பதை மனதிலிருத்தி தேவி பராசக்தியை வணங்குங்கள். பக்குவமேற்பட்டுப் பகவானைச் சேர வல்ல பாதை தெரியும்.

தமிழ் நாட்டின் தனிச் சிறப்பு, அங்கு வாழும் மக்களின் பக்தி பாவம், சகிப்புத்தன்மை அதிஉபசாரம், சமூகசேவா சிரத்தை. இப்பண்புகள் சோபித்து இயங்குவதாகுக.

## வழக்கம்போல் ரயில் சேவை

கொழும்பு மார், 7

அலுத்கமைக்கருகில் ரயில் வண்டியொன்று தடம்புரண்டதனல் ஏற்பட்டிருந்த போக்குவரத்து நெருக்கடி இப்போது தீர்ந்துவிட்டதாகவும் ரயில் சேவை அங்கு வழக்கம் போல் நடைபெறுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மந்திரி ஆலோசனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருப்பதாகவும் இரண்டொருதினத்தில் ஒரு முடிவுக்குவரலாமெனவும் மேலும் தெரியவருகிறது.

தபால் சிப்பந்திகள் ஆட்சேப வேலை நிறுத்தம் ஆரம்பித்தகாலத்திலிருந்து நேற்று முன்தினம்வரை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துகொண்டிருந்த தபால்களை பாதுகாப்பாக வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துகொண்டிருந்த கடிதங்கள் இனி இங்கு அனுப்பிவைக்கப்படமாட்டாது.

யாழ்ப்பாணம் தபால் கந்தோரிலும் இதர உபதபாற்கந்தோர்களிலுமிருந்து தந்திகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அவைகள் அந்த அந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுவடுகின்றன. ஆனல் இங்குவரும் தந்திகள் விநியோகிக்கப்படுவதில்லை.

## பால்ய குற்றவாளிகளுக்கு தொழிற்பயிற்சி

கொழுப்பு மார்ச்

பாலய குற்றவாளிகளுக்கு தொழிற் பயிற்சியளிப்பதற்கென ஒரு பயிற்சி நிலையத்தை சடவத்தையில் வெரகம என்ற இடத்தில் அரசாங்கம் அடைக்கவிருக்கிறது.

உன்னத திரைச் சித்திரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) விஜிதா (மன்னேரியா) மொடர்ன் (பதுளை)

என். டி. ராமராவ் – சௌகார் ஜானகி

வி. நாகையா — குசலகுமாரி
டி. எஸ். பாலையா — டி. ஆர். ராமச்சந்திரன்
பி. கண்ணும்பா — விஜயலட்சுமி
கிரிஜா — ஓ. ஏ. கே. தேவர்
பி. எஸ். வீரப்பா — ராஜனலா
மோகண — எஸ். வரலட்சுமி

மற்றும் பலர் நடித்த



# ராஜ சேவை

பின்னணி:
திருச்சி லோகநாதன், ஏ. எல். ராகவன், கண்டசாலா, எஸ். ஸி. கிருஷ்ணன், பி. சுசீலா, பி. லீலா, எஸ். ஜானகி.

டைரக்ஷன்:
கே. காமேஸ்வரராவ்

வசனம் – பாடல்கள்: தஞ்சை ராமையாதாஸ்
சங்கீதம்: டி .வி. ராஜா

மனோகரா (யாழ்ப்பாணம்) | நியோகா அன் த டைகர் மேன்
தினசரி 3 காட்சிகள 3-30, 6-30, 9-30.
ஆங்கில சீரியல் படம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.